**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.107/2015**

**வா.சா.1– சின்னமாதாநாயக்கர் – , த/பெ.சாமியப்ப நாயக்கர்**

**நாள். 27.01.2026**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1,2,8,9,10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் தாக்கல் செய்த கூடுதல் நிரூபண வாக்குமூலம் நான் சொல்லிதயார் செய்தது தான். படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.அதிலுள்ள விபரங்கள் தெரியும். நான் தாக்கல் செய்த கூடுதல் பிரமாண வாக்குமூலம் 11, 12 அயிட்ட சொத்துகளுக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியாக தெரியாது. கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்களை பிராதில் சொல்லியுள்ளேன். பிராதில் மேற்சொன்ன விபரங்களை சொல்லவில்லை வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் பிராதை தாக்கல் செய்துள்ளேன். பிராதில் எந்தெந்த சொத்து பூர்வீகம் எந்தெந்த சொத்து கூட்டுக் குடும்ப சொத்து என்றும், கூட்டு குடும்ப வருமானத்தை பொறுத்து வாங்கியுள்ள சொத்து என்று தெரிந்து வழக்கை தாக்கல் செய்திருக்கும் பட்சத்தில் 11, 12 அயிட்ட சொத்துக்களை பொறுத்து நான் சொல்லியிருப்பேன் என்றால் சொல்லவில்லை. 11, 12 அயிட்ட சொத்துககளை சேர்ப்பதற்கு மனு தாக்கல் செய்த போது அவை கூட்டுக்குடும்ப சொத்து நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்தாக சேர்க்கப்பட்டுள்ள 11,12 சொத்து எந்த வகையிலும் கூட்டுக்குடும்ப சொத்து இல்லை வேண்டுமென்றே தற்போது மனு செய்து அதை சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மேற்படி சொத்தை எவ்வாறு அனுபவித்து வருகிறார்கள் என்றும், வருவாய் ஆவணங்கள் தங்கள் பெயரில் ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் எதிருரையில் சொல்லியபின்பும் தற்போது நான் மனு செய்து மேற்படி சொத்தை தாவா சொத்தாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. கூட்டுக்குடும்பத்தில் எவ்வளவு வருமானம் வந்தது என்பது குறித்து தாவாவில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். கூட்டுக்குடும்ப வருமானத்தை கொண்டு அதை பொறுத்து 1,3 பிரதிவாதிகள் பெயரில் கிரையம் வாங்குவதற்கு எவ்வித அவசியம் ஏற்பட்டது குறித்து தாவாவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மூத்த சகோதரர் ஆண்டிமுத்து நாயக்கர் கூட்டுக்குடும்பத்தை நிர்வாகம் செய்து கொண்டிருந்தார் என்று சொல்வதும், 11,12 இலக்க சொத்துக்களை பொறுத்து எவ்வித கூட்டுஉரிமையோ, பாத்தியமோ, அனுபவமோ கிடையாது என்றாலும், நான் எந்த

காலத்திலும் 1,3 பிரதிவாதிகளுடன் சேர்ந்து மேற்படி சொத்துக்களை கூட்டாக அனுபவிக்கவில்லை என்றாலும், மேற்படி சொத்துக்கள் 1,3 பிரதிவாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றாலும் ஆகவே எனக்கு எந்த உரிமையும் இல்லாத பட்சத்தில் மேற்படி சொத்தில் பாக உரிமை கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. அவை கூட்டாக அனுபவித்து வந்த சொத்துக்கள் தான்.

**<u>பிரதிவாதிகள் 4, 6 தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மூத்த சகோதரர் ஆண்டிமுத்து நாயக்கர் கூட்டுகுடும்ப சொத்துக்களை நிர்வாகம் செய்தார் என்றால் சரிதான். எனக்கு பூர்வீக சொத்து 75 ஏக்கர் இருக்கும் என்றால் சரிதான். அதில் மாமரம் 800 மரமும், தென்னை மரம் 600 மரமும், புளியமரம் 1000 மரமும் இருக்கும் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி ஆண்டிமுத்து நாயக்கரின் மகள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி பிறந்தது முதல் கூட்டுக்குடும்பத்தில் தான் இருந்தார் என்றால் சரிதான். அவர் தோட்டத்தை பார்த்து வருகிறார். 1 முதல் 3 பிரதிவாதிகள் வாங்கிய சொத்துக்கள் கூட்டுக்குடும்ப வருமானத்தில் வாங்கிய சொத்துகள் என்றால் சரிதான். 11, 12 சொத்துக்கள் கூட்டுக்குடும்ப வருமானத்தில் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் 4ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதிக்கு 3ல் 1 பங்கு கிடைக்கக்கூடியது என்றால் சரிதான்.

**7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**<u>மறு விசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.01.27 19:23:42 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.